மகாபிர மான் ... யார்
மா. வைத்தியலிங்கவுபாத்தியாயரவர்கட்கு

உ
சிவமயம்

மகாபாசுபதம்.

இது விஞ்ஞாபன பூர்வமாயெழுத்துலாவிப் பதினெட்டு வயசுசென்றவளும் பூப்புற்றவளும் வாக்குத்தானந் தானுஞ் செய்யப்படாதவளும் ஆன ஒருநான்காம் வருணத்துப்பெண் இறந்த ஆசௌசத்தைப் பிதிர்ஞாதியர் மூன்றுநாளனுட்டிக்கச்சம்மதங்காட்டினவரையெல்லாமறுக்கும்.

மகாகனம்பொருந்திய சைவசமயாபிமானிகளாகிய ஆன்றோர்களே!

திருமந்திரம்

கண்காணியில்லென்று கள்ளம்பலசெய்வார்
கண்காணியில்லாவிடமில்லைகாணுங்கால்
கண்காணியாகக்கலந்தெங்குநின்றானைக்
கண்காணிகண்டார்களவொழிந்தாரே.

"மாரா ஸ்ரீ மு. சுப்பிரமணியப்பிரக்கிராசியார் அவர்களுக்கும் மாரா ஸ்ரீ ச. கணபதிப்பிள்ளைவிதானையார் அவர்களுக்கும் மாரா ஸ்ரீ இ. பொன்னம்பலபிள்ளை ஆராய்ச்சியாரவர்களுக்கும் விஞ்ஞாபனம்.

மந்திகையில்நடந்த ஆசௌசக்கூட்டத்தீர்ப்பின் சரியானகொப்பி இதன்கீழ்க்காட்டப்பட்டிருக்கின்றது. அதைப்பார்த்துக்கொள்க.

புலோலி
௧௮௯௯ ௵
தைமீ ௧௨உ

இங்ஙனம்
செ. இராமலிங்கக்குருக்கள்
அ. வேன்மயில்வாகனர்,"

கோப்பி

"விகிர்தி௵ கார்த்திகை௴ ௨௰௨

மக்திகை அம்மைகோயிலிற்கூடிய மரணாசௌசக்கூட்டத்தில் நிகழ்ந்த தருக்கத்துக்குமுடிவு

பூப்படைந்து, விவாகமின்றி இறந்தபெண்ணுடைய ஆசௌசம் ஞாதிகளுக்குப் பூரணமென்பவர்கள் ஸ்மிருதிவசனங்காட்டினார்கள். அப்பெண்ணுடைய ஆசௌசம் ஞாதிகளுக்கு மூன்றுநாளென்பவர்கள் சிவபெருமானது திருவாக்காய், முற்றும் பிரமாணமாய்ச், சித்தாந்தமாய், மகாப்பிரளயபரியந்தம் நாசமின்றிச், சுத்தவித்தையிலிருப்பதாய் விளங்கும் ஆகமவசனங்காட்டினார்கள். ஆகமவிதியையே சைவர்கள் கொள்ள வேண்டுமென்பது ஆன்றோரனைவர்க்குங் கருத்தாதலால், நமக்குமதுவேகருத்து அ சிவசம்புப்புலவர்,,

என அந்தப் பக்ஷவாதிகள்வழியாய் ஊர்ப்பிரபுக்களுக்கனுப்பப்பட்டிருக்கிறகொப்பியைப்பாருங்கள்; இக்கொப்பி கண்டு தீர்ப்பின்சாரத்தை நாம் மறுத்த "மூன்றுநாளாசௌசத்தீர்ப்புமறுப்பு,, என்னும்பத்திரத்தைப் பார்த்திருக்கின்றீர்கள்; பின், விகிர்தி௵ தை௴ ௧௰௨ என்று மாசி௴ ௧௪௨ "அ. வேன்மயில்வாகனச்செட்டியார்,, வெளிப்படுத்தியபத்திரத்தையும் பார்த்திருக்கின்றீர்கள். ஆனால் பூரணாசௌசமென்றதற்கு நாம் காட்டிய ஆகமப்பிரமாணங்களும் அங்கிகரிக்கத்தகாதனவாமோ என்பதைத் தயைகூர்ந்து பார்த்து உங்கள் நடுநிலையும் சைவசாஸ்திரவுண்மையும் உலகறியநாட்டிவையுங்கள்.

கிரிதிருசௌசஸ் தாயனமென் றெழுந்த போலிப்பத்தி ரத்தை நாம் பொருட்படுத்துவது தகாதே யாயினும், குசண த்திலே "நீங்கள் எப்பொழுதுஞ்செய்துவந்த ஆலய சேவைமுதலிய கிரியைகளை நீக்காது கைக்கொண்டொழுகி ஈடேறக் கடவீர்கள்„ எனக் கட்டளை செய்தமையின், அது கண்டசனங்கள் பூரணசௌச மில்லையென்று தீர்த்தாகமதித்து ஆசௌசத்தோடு கோயில்களுட் போகத் தலைப்படுவர்கள்; பட்டால்,

"𑌮𑍋𑌹𑌾𑌦𑍍𑌵𑌾 𑌦𑌂𑌭𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌾 𑌜𑌾𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌶𑍌𑌚𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃,
𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍇𑌨𑍍𑌮𑌮 𑌗𑍇𑌹𑌂 𑌯𑍋 𑌨𑌾𑌶𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌧𑍍𑌰𑍁𑌵𑌂„

(வேதாகமஸ்மிருதிபுராணங்களில் இன்னது செய்தால் இன்னபாவம் என்று அறுதியிட்ட தறிந்திருக்கவும், அதற்குப்பயமின்றிச்செய்வது தைவிகமும் அவர்கள் ஆசைமிகுதியால்அதனைச்செய்வதும இம்மைப்பயனே யொழிந்து அம்மைப்பயனை யார்கண்டாரெனக் கருதுவதும் மோகமு மாமெனச் சுப்பிரமணியப்பெருமான் அகத்தியனுர்க்கறிவுறுத்திய தனுலே இப்படிப்பட்டதென்றுணரப்படும்) மோகத்தாலேனும் 'இடம்பவிருத்தியாலேனும் தத்தம் வருணத்துக் குரிய ஆசௌசத்தை அநுட்டியாது எவன் நமது கிருகத்திற் (கோயிலுட்) புகுவானோ, அவனால் அது (கோயில்) நாசமாய்விடும்; இது நிச்சயம். என்றற் றொடக்கத்த சிவவாக்காலே அக்கோவில்களெல்லாம் நாசமாகுமே; ஆனால், ஏனையவற்றைப் பேசுவதென்?

இப்படியாஞல் சைவாசாரங்கள் எப்படியாமோ! சைவாபி மானிகள் கொள்கை எப்படியாமோ! என்றெண்ணி, அப்பத் திரத்தையெடுத்து, அவர் தங்கொள்கையைச் சாதித்தற் கநு கூலமாயெடுத்து நாட்டிய "சபைநிகழ்ச்சி" யையும் பிறவ ற்றையும் பொருட்படுத்தாது, எடுத்துக்கொண்ட சாஸ்திரவி ஷயத்தையே பொருட்படுத்தித்தீட்டிப் பூரண சௌசக்கொ ள்கையைச்காட்ட முயன்றனம்.

குறித்த ஆசௌசம் பூரணமென்பதற்குக் காட்டியவா சௌசதீபிகைப்பிரமாணங்கள் பலமற்றனவெனின் வேறு வே றுபிரமாணங் காட்ட வேண்டும். ஆசௌசதீபிகையிலெடுத்து க்காட்டப்பட்டு, ஆண்மரணத்திலும் பெண்மரணத்திலும் ஞா தியர்க்குவருமாசௌசத்தை வகுக்கின்ற காமிகாகம சுலோக ம்வருமாறு:

நாம்ந: ப்ராக் த்³விஜஜந்மநாந்தோபநயநாத்புரா, ஸ்நாந
மேகாஹம் ப்ராக்சௌலாத் த்ரிதிநஞ்ச ஸமீரிதம், தது³ர்த்⁴வம்
த³ஶாஹம் ஸ்யாத் ஸ்த்ரீஜாதிநாம் ஸூதகோபரி, வள
ஜாதகே ஷட்³வர்ஷாத்ஸ்வவிவாஹாத் ப்ராக்வர்ஷாத்ஸ்ப்ருஶாத்,

இ—ள் ஆண்மரணத்தில் நாமகரணத்தின் முன் ஸ்நா னமும், பன்முளைக்குமுன் ஏகதினமும், அதன்மேல் உபநய னத்தின்முன் திரிதினமும், அதன்மேல் பூரணமும் ஞாதிக ளுக்குச்சொல்லப்பட்டது; பெண்மரணத்தில், சௌளத்தின்

முன் ஸ்நாநமும், வாக்குத்தானத்தின்முன் ஏகதினமும், விவாகத்தின்முன் திரிதினமும், அதன்மேற் பூரணமும் ஞாதிசனுக்குச் சொல்லப்பட்டது. எ—று.

அவாக்ப்ரதாநாத்யதீதாஷ்டவர்ஷா கந்யாம்ருதாசேத் த்ரிராத்ரம் ஸநாபேஹ: = (வாக்குத்தானஞ் செய்யாதிருப்பின் எழுவயசுநிறைந்த கன்னிகை மரித்தவழி ஞாதிக்குத் திரிதின சௌசம்) என்பது முதலிய பிரமாணங்களால், வாக்குத்தானம், எழுவயசு முடியுமுன் னிகழவேண்டும்; நிகழா தாயின் மேலே மூன்றுநாளாசௌசமெனை, வாக்குத்தானநிகழ்ச்சிக்கு, எல்லை பெறப்படுதலின், அக்கருத்தமையவே "அஷ்டவர்ஷாத் ப்ராக்,, எனப்பட்டது; படவே, விவாகபிரதான காலம், எட்டாம்வயசேயென்பது துணியப்பட்டது.

பெண்களைக்காமகாலத்திற் சோமனும், பூப்புக்காலத்திற் கந்தருவனும், ஸ்தன தரிசனகாலத்தில் அக்கினியும் அணைவரென்பதூஉம், இவ்வணைவின்முன் விவாகஞ்செய்தலே பதிவிரதா தருமத்திற்குச் சிறந்ததென்பதூஉம் உண்மைநூற் றுணிபாதலால், எட்டாம் வயசே விவாகபிரதானகாலமென்பதைச் சித்தசமாதானமுள்ள விவேகிகள்மறுக்கமாட்டார்களே! இஃதுணராது துரபிமானத்தாற் கடாயினார்க்குச் சிவதருமோத்தர உரையில், "பெதும்பைமுதலிய பருவத்தையுடைய மாதரைக்கூடவேணுமென்றே கருதி,, என்றிருப்பதற்கெ

விவாகத்தின்மேற் பூரணமாம் என்றுரைத்தாம்; இங்ஙன முரைத்தல் பொருந்துமாவெனக் கடாயினார்க்கு, ஆண்மரணத்தினின்ற "ஜ்ஞாதீநாம்" என்பதைப் பெண்மரணத்தி லியைப்பதுபொருந்துமா? எனக்கடாவிடைகொடுக்கப்படும். இங்ஙனம் அமையாவிடின் விவாகத்தின்மேற் பூரணசௌசம் இவ்வாகமசம்மதமன்றாய்முடியும்; இதுநிற்க.

எப்பக்ஷஞாதிகள் எவ்வாசௌசத்தையநுட்டித்தற்குரியராவரோ, அப்பக்ஷஞாதிகள் அவ்வாசௌசத்தை யநுட்டித்தற்குரியராவர், என்பதே நூலோர்கொள்கை; இதுவிளங்கவே 'க்ஷுந்நமொத்வேவிஷாநாம்', என்னும் சங்கிரஞானசுலோகமெழுந்தது. இங்ஙனம் கொள்ளும் யுக்தியில்லாது இவ்வமைப்புச்சாலுமா? எனக் கடாயினார்க்கு, தத்தபுத்திர விஷயத்தில் நுங்கொள்கைபோலத் தத்தஞ்செய்த பின்னரும் பிதிர்ஞாதியர் பூரணசௌசங்கொள்வது சாஸ்திர சம்மதமாகுமா? இவ்விஷயத்தைத் தீபிகையிலெங்கமைப்பீரெனவும், தந்தோற்பத்தியின்முன விவாசம் நிகழ்ந்தவழிப் பூரணசௌசக்கொள்கை யைத்தீபிகையி லெங்கமைப்பீரெனவும் கடாவிடைகொடுக்கப்படும்; இதுநிற்க,

'உபநயநாஸு', என்பது உபநயநகருமகாலங்களொத்து நிகழ்தலைக்குறித்து நிற்றலின், அதனோடுமொட்டப்பட்ட 'விவாஹாஸு', என்பதும் விவாககருமகாலங்களொத்து நிகழ்தலைக்குறித்துநிற்கும்; ஆகவே, பிரதானகாலத்திற் செய்யப்ப

ட்ட அக்கருமத்தின்மேற் பூரணமென்பதே இச்சாமானியவசன சம்மதமாகும்; இவ்வசனத்திடையே ஊன்றப்பட்டு நிற்கும் "க்ருதேநாஶௌசீ,, என்னும் விசேடவசனத்தினால் உபநயநகருமம் பிரதானகாலத்திற் செய்யப்பட்டிலதேல், அக்கருமம்நிகழும்வரையும் பூரணம் என்பதமையும்; அமையவே விவாகமும் பிரதானகாலத்திற் செய்யப்பட்டிலதேல் அக்கருமம் நிகழும்வரையும் பூரணம் என்பதும் அமையும்; இவ்வாறே கொள்ளப்படும் மெய்ப்பொருளுணரமாட்டாது, திரிதினசௌசக்கொள்கைக்குக்காட்டப்பட்ட இக்காமிகாசமவசனம் அவர்க்கே பிரதிகூலமாய் எமக்கு அநுகூலமாய் எட்டுவயதின் மேற்பட்டபெண் இறந்தவழி விவாகஞ்செய்யப்படாமையிற் பிதாவழிஞாதியர்க்குவரும் பூரணசௌசக்கொள்கையை நாட்டுகின்றதா அன்று?

விவேகிகளே! சற்றேசவனஞ்செலுத்துங்கள். இன்னும்விரிப்பின் மிகப்பெருகும்.

தத்தாநூடாமரணவிஷயம்

த்ரிராத்ரம் வாக்தத்தஜாதேஷ்வாஹுர்த்தாநோஶாத்ரிதாவவம்,

இ—ள் வாக்குத்தானஞ்செய்யப்பட்டு, விவாகம் செய்யப்படாதவள் இறந்தால், மணவாளனுக்கும் அவனுடைய ஞாதிக்கும் மூன்றுநாளாசௌசமுண்டாம். எ—று. இங்கே ஞாதி என்றது பிதாவைமுதலினோரையென்க.

பிதா மாதா சகோதரர் என்னும் இவரொழிந்தவரன்றோ ஞாதியர் எனப்படுவர். இங்கே பிதாவைமுதலினோரை

ஞாதியரெனச்கூறுவ தெங்ஙன மெனக் கடாயினார்க்கு, அறியாது கடாயினீர்! ‘வித்ராதிஜ்ஞாதிநாம், என்ற தீபிகைவசனத்தைக்கண்டு, அவ்வவ்விடத்துக்சேற்றவாறு பொருள்கொள்ளுதலே சாலுமென உண்மைதெளிந்தடங்குதிர்! தத்தஞ் செய்ய ஏற்றுள்ள மணவாளனுக்கும் ஞாதிக்கும் மூன்றுநாளென விதித்திருக்க, இதற்கு முரணாக உய்த்துணருமுணர்வின்மையின், “நாயகனுக்கும் அவனுடைய தாய்க்கும் தந்தைக்கும் இருபக்ஷத்து உரிமைகொள்ளும் உறவினராகிய சகோதரருக்கும் பூரணாசௌசமாகும்,, என்னும் இப்பொய்ப்பொருளை அறிவித்த குருவின்பெயரைச்கூறிவெளிவிடும்!* ஏற்றன்ளமணவாளனுக்கு மூன்றுநாளானால் அவனுடைய தாய்க்கும் தந்தைக்கும் பூரணம்வருதல் பெற்ற குற்றத்தினாலா? சகோதரர்க்குப் பூரணம்வருதல் ஒருவயிற்றிற்பிறந்த குற்றத்தினாலா? அல்லது சகோதரர் தாய்தந்தைகளுக்குப்பின்னிற்றலின், அவருடையசகோதரராவரா? இவர் யாவருடைய உரிமைகொள்ளுவர்? உரிமைகொள்ளுந்தன்மைதந்தைதாயர்க்கில்லையா? மற்றைய உறவினர்க்கில்லையா? சகோதரிசட்கில்லையா? இருதாயாதியர் என்பதற்கு இருபக்ஷத்துரிமைகொள்ளுமுறவினரெனின், அவர் ஞாதியர்தாமே! தாயாதியர் சகோதரரேயெனில் இதற்குப்பிரமாணமெது? மேல் “பாலன்பாலகி நாமகரணம்பண்ணுமுன் மரித்திடி னொருதரத்தின் வந்தவர்கட்கெல்லாமருவுமகந்திரிதினம்பின்மரித்திடிற்பூரணமாம்,, எனச்சகோதராசௌசம் வகுக்கப்பட்டிருக்க, இவ்விஷயத்திற்கு

* முதனூர்படி.

மாத்திரம் அமைக்கவேண்டுவதென்? "வாதசுஜ்ஞாதேரா:" என்பது இருமையாக நிற்றலின், வரனுக்கும் அவன் ஞாதிக்கும் மூன்றுகாளெனவே பொருள்படுமென்பது, பாலவியாகரணங்கற்குஞ் சிறுவரும் ஒருமை இருமை பன்மைப்பகுப் புணர்ந்து துணியத்தக்கதாகவும், நாயகனுக்கும் பூரணம் என்றதற்குப்பிரமாணமெது? இச்சுலோகபாகத்தின் மொழிபெயர்ப்பு "பத்தாவின் கையிற் றண்ணிறைந்த புனல்வார்த்துத்தரியாடங்கலிக்குத் தனஞாதிக்குங்கணவன் ஞாதிக்குமூன்றும்" என்னும் இவ்வளவில அமையுமாகவே, இதனோடொருசிறிதுந் தொடராதெஞ்சிநின்ற மற்றையோரடி முழுவதையும் ஒருதொடராக்கியதென்? அவ்வடிக்குவேறினியென்சொல்வீர்? இங்ஙனமயக்கியது, தாயாதியரைச் சகோதரரெனக் காட்டிப் பேதைச்சனங்களை வஞ்சித்தற்கா? கணவன்ஞாதிக்கும் என்பதைக் கணவனுக்குட் ஞாதிக்குமென்றது, கணவன்றாய்தந்தை என்புழிக் கணவற்குமெனிற் பாஷைவியதிதப்பாதா? மெய்ப்பொருளை மறைத்துப் பொய்ப்பொருளைக் காட்டிப் பண்டிதர்கள் முற்பட்டு மருதுவிடுவார்களா? குருமுகமாயறிந்த பொருளென்று சூழ்ச்சிசெய்து குருவையும் பரிபவத்திற்செல்லவிடின், குருதூஷண தோஷம்யார்மாட்டது? மிசைபடக்கூறன்முதலிய பலகுற்றங்களும் ஆகமமுரணுதிமுரண்களும் குழூஉச்கொண்டடைந்த நும்முரையைக் குருதூஷண தோஷ ராகித்திய சன்மார்க்கசீலராகிய நல்லறிஞரங்கீகரிப்பரா? தாராதத்தமும் வாக்குத்தத்தமும் ஒன்றுகவி

ளங்கியது எந்த ஆகமப்பிரமாணங்கொண்டு? "எட்டாம் வயதளவுமென்ற குறிப்புவாக்குத்தானத்திற் செல்கின்றதென நீங்களேகூறிய உண்மையைமறந்து, என்றநீர் எட்டாம்வயது தொடங்குமுன் வாக்குத்தானஞ்செயப்படுமோகவே எட்டாம் வயசு விவாகபிரதானகாலமாம் என அங்கீகரித்து முடித்ததற்குமாருக, எட்டுவயசுமுடியுமளவும் என்றதற்கு நியாயம் எது? என இவ்வாறே தலைமிராதொழியக்கடாவிடைகொடுக்கப்படும். இதுவுநிற்க.

விசேடவசனம்

க்ருதே நாமாதி ஸம்ஸ்காரே ப்ராப்தகாலே விவர்ஜிதே, ஸ்வகாலே ஸம்ஸ்க்ருதே வா ப்ரேதே யதா ஜாதி ஸமாப்ரவம்.

இ—ள் நாமகரணமுதலிய சடங்கு பிரதானகாலத்திற்குமுன்பே கௌணகற்பிககாலத்திற் செய்யப்பட்டபோதும் பிரதானகாலத்திற் செய்யப்படாதபோதும் பிரதான காலத்திலே செய்யப்பட்ட ஆணேனும் பெண்ணேனு மிறந்தபோது ஞாதிகட்கு எங்ஙனமாசௌசமுண்டாமோ அதுபோல, பிரதானகாலத்தின்முற் செய்யப்பட்டும் பிரதானகாலத்திற் செய்யப்படாதுமுள்ள ஆண்பெண் மரணவிஷயமாகிய இவ்விடத்திலும் ஆசௌசமுண்டாம். எ—று.

சுவேத்ரு என்னும் பொதுச்சொல் எஞ்சிநின்றது.

இதன்கருத்து ஸ்நாநம் ஏகதினம் திரிதினம் பூரணம் எ

ன்றவைகளுள் பிரதானகாலத்தின்முற் சடங்கு செய்யப்படி னும், பிரதானகாலத்திற் செய்யப்பட்டதுபோலவே ஆசௌசங்கொள்க; பிரதானகாலத்திற் சடங்கு செய்யப்பட்டிலதேனும், பிரதானகாலத்திற்செய்யப்பட்டதுபோலவே ஆசௌசங்கொள்க. என்பதாம்.

அஃதாவது, நாமகரணத்தின்முன் ஸ்நானம் என்பது பொதுவிதி; பிரதானகாலத்திலே நாமகரணஞ் செய்யப்படாதவனிறந்தால் ஏகதினம் என்பது சிறப்புவிதி. பஸ்முளைக்குமுன் ஏகதினமென்பது பொதுவிதி; பிரதான காலத்திலே அன்னப்பிராசனம் செய்யப்படாதவனிறந்தால் திரிதினம் என்பது சிறப்புவிதி. உபநயநத்தின்முன் திரிதினம் என்பதுபொதுவிதி; பிரதானகாலத்தில் உபநயநஞ்செய்யப்படாதவனிறந்தால் பூரணம் என்பது சிறப்புவிதி. சௌளத்தின்முன்ஸ்நானம் என்பதுபொதுவிதி; பிரதானகாலத்தில்சௌளகருமஞ்செய்யப்படாதவனிறந்தால் ஏகதினமென்பது சிறப்புவிதி. வாக்குத்தானத்தின்முன் ஏகதினம் என்பது பொதுவிதி; பிரதானகாலத்தில் வாக்குத்தானஞ் செய்யப்படாதவளிறந்தால் திரிதினமென்பது சிறப்புவிதி. விவாகத்தின் முன் திரிதினமென்பதுபொதுவிதி; பிரதானகாலத்தில் விவாகஞ்செய்யப்படாதவளிறந்தால் பூரணம் என்பது சிறப்பு விதி. வாக்குத்தானஞ்செய்யப்பட்டு விவாகஞ்செய்யப்படாதவளிறந்தால் அவ்விவாகத்தின்முன் திரிதினமென்பது பொதுவிதி; பிரதானகாலத்தில்விவாகஞ்செய்யப்படாதவளிறந்தால் பூரணம் என்பது சிறப்புவிதி.

இங்கே, சன்மசந்தப்புதலையே எடுத்தனமாதலின், பிரதானகாலத்தின்முற் செய்யப்பட்டவழியும், பிரதானகாலத்திற் செய்யப்பட்டதுபோலப் பொதுவிதியானமைந்த நூனசௌசங்கொள்ளப்படாது சிறப்புவிதியானமைந்த அதிகசௌசங் கொள்ளப்படுமென்பது இவ்வாறே உய்த்துணரப்படும்.

ஆகவே, பிரதானகாலத்தின்முன் விவாகஞ்செய்யப்பட்டவழி வரபக்ஷத்தாரும், பிரதானகாலத்தில் விவாகஞ்செய்யப்படாதவழிப் பிதிர்பக்ஷத்தாரும், வாக்குத்தானம்நிகழ்ந்து பிரதானகாலத்தில் விவாகஞ்செய்யப்படாதவழி இருபக்ஷத்தாரும் பூரணங்கொள்ளவேண்டுமென்றதாயிற்று.

இச்சுலோகத்தையே, தமிழ்நூலாசிரியர் 'ஊனமுறுமாசௌசமதிக, நூனங்களுரு துரைத்த கால[illegible]சன்மசந்தப்பிடினும்', எனமொழிபெயர்த்துப்பிர[illegible]ற்செய்யப்படுதலை உம்மையாற்றழீஇயினர்.

இத்தாற்பரியங்கொண்டே ஸ்[illegible], விவாகத்தின்முற் பூப்புற்றிறந்தாற் பூரணம் [illegible] குறித்த விசேடவசனம் ஸ்மிருதிகளினுங் [illegible] [illegible]சுஹவெ,, = பூ[illegible] [illegible]றந்தாற் பூரணம் என்றற் றொடக்[illegible] பூப்புவரிற் பூரணமென[illegible]வர்க்கே புலப்படும். இதுவுநிற்க.

ஆகமமொழிபெ[illegible]—
"பெண்ணிறந்தான [illegible]

பிறங்கிடுசௌளத்தளவும் பேசிடுநாளொன்றே, பண்ணிறைந்
த மொழிக்கெட்டாம் வயதளவுமூன்றும் பரிப்பளவுமங்கலிய
ம்பந்தாவின்மையிற், றண்ணிறைந்தபுனல்வார்த்துத் தரியா
மங்கலிக்குத் தன்ஞாதிக்குங்கணவன்ஞாதிக்குமூன்றாங், கண்
ணிறைந்தபிதாமாதாக்கணவன்றாய்தந்தை கருதிருதாயாதிய
ர்க்குங்கிளரகம்பூரணமாம்,

இதன்கருத்து. பெண்மரணத்தில் ஞாதிகட்கு ஆசௌச
ம், சௌளம்வரையும் உடன்சுத்தி.(ஸ்நானம்) வாக்குத்தான
ம் வரையும் ஏகதினம். விவாகம்வரையும் திரிதினம். தத்தா
நூடையாயின், விவாகம்வரையும் அவள்ஞாதிகட்கும் கணவ
னுக்கும் அவன் ஞாதிகட்கும் திரிதினம். பிரதான காலத்தில்
விவாகஞ்செய்யப்படாத தத்தாநூடையாயின் விவாகம்வரை
யும் இருபக்ஷத்துத் தாய்தந்தையர்க்கும் நாயகனுக்கும் இரு
பக்ஷத்து ஞாதிகட்கும் பூரணம். என்பதாம்.

கிளரகம் என்பது, பிரதானகாலத்தின்மேற்பட்ட (தத்
தா நூடை மரித்த) ஆசௌசம் என்றதாகக்கொள்க. இங்ஙனம்
[illegible] யொன்றையும் வேறுதொடராக்கிப் பொருளுரையாக்
[illegible]லிலடுத்துக்காட்டிய வசனத்தோடு மாறுபட்டு
[illegible]ழுந்தெஞ்சிநிற்றல் முன்னரேயுரைத்தாம்.

[illegible] விதியைச் சிறப்புவிதி மறுக்குமாறு விளை
[illegible]ச்செய்யுட்கும் வகுத்துக்கொள்ளப்படும்.
[illegible]த்தாகரணமாகவே, தத்தாநூடை மரி
[illegible]காலத்தின் மேற்பட்ட ஆசௌசம்
[illegible] தொடர்படுவிக்கப்பட்டது.

இங்ஙனமோருதாகரணங்காட்டிய மாத்திரையானே, ஏனைய வுமிவ்வாறேயாமென வூகிப்பது நல்லறிஞர்க்கே இனிதுபுலப் படும். இச்செய்யுளில் எட்டாம்வயதளவும் என்பதும், சாமிக த்தில் எட்டாமாண்டின்முன்னென்பதும், எட்டாமாண்டார ம்பிக்குமுன் என்னு மவ்வாரம்பவெல்லையையே நாட்டுமன் றி, முடியுமளவென்னும் போலிமுடிபுக்கொள்கையை ஒருசி றிதும் நாட்டமாட்டாவாம்.

பேதைப்பருவமுடியுமுன், (அதாவது காமசால நிகழ்ச்சி க்குரிய பெதும்பைப்பருவம் அணுகுமுன்) விவாகஞ் செய்த லே உத்தமமென்பது, மேலே மற்றைவருணத்தார்க்குபநய னகாலம் வேறுவகுத்தாற்போல விவாகத்துக்கு வேறுகாலம் வகுக்காது எல்லாவருணப்பெண்களுக்கும் ஒருபடித்தாய், கர்ப்பாதி எட்டாமாண்டே விவாகபிரதானமென் றுறுத்திய பர சிவசம்மதத்தானே தெளியப்படும்.

எட்டாம்வயதளவுமென்பது, எட்டுவயசு வருமளவுமெ னப்பொருள்பட்டவாறே யன்றிச், சிங்கநோக்காக எட்டாம்வ யசிற்பொருந்தும் மங்கலியம்பரிப்பு எனவும் பொருள்பட்டு, விவாகபிரதானகாலவரையறையுணர்த்திய வாறு நல்லறிஞர் க்கேபுலப்படும். இஃதுணரமாட்டாது "எட்டாம்வயதளவுமூ ன்றும்பரிப்பளவு மங்கலியம் என்றியைந்தது எப்பாலுஷ் ந டையிற்பயின்றதெளிவு" எனத் தம்வெள்ளறிவைவிளக்கிப்பே தைச்சனங்களைமயக்கிக் கடாயினார்க்கு, சிவஞானபோதத்து "அவையேதானே" என்னுஞ் சூத்திரத்து "ஆணையின்" என் பதற்கு உரைக்கப்பட்டிருப்பதை இனிக்கண்டு இனிப்போலி

விஷயங்களிற் றலைநிமிர்வீரா அல்லது குனிவீரா என்றுகடா
விடை கொடுக்கப்படும். "ஔரசம் என்பதற்கு இரட்டுறமொ
ழிந்த .... நுண்மையேநுண்மை,, எனச்சோதிடசாரமுணரா
த தம் நுண்மைகாட்டிப் பரிதபித்தார்க்கு, புனல் வார்த்து
இருது ஆய் தரியாமங்கலிக்கு அகம் பிதாமாதா ஆதியர்க்கும்
கணவற்கும் தாய்தந்தையாதியர்க்கும் பூரணமாம் என்றியை
த்தும், எனவே, இருது ஆய் தரியாமங்கலிக்கு அகம், அவள்
பிதாமாதா ஆதியர்க்குப் பூரணமாமென இயைத்தும் ஸ்மிரு
திசாரத்தையும் அடக்குதற்கன்றே கருதிருஞாதியர் நமக்கும்
என்றுது இங்ஙனம் இருதாயாதியர்க்கும் எனக்கூறியதாக நி
ற்குமிந்நிலையும் விளங்கமாட்டிரேனிற், பண்டிதர்கள்பாற்கே
ட்டுண்மை தெளிவீரென் றறையப்படும்.

ஔரசம் கணவனுக்கும் அவன் தாய்தந்தை யாதியர்க்கு
ம் பூரணமாமென்றியைத்து விவாகத்தின்மேற் பூரண முண்
மை தெளியப்படும். அகம் பிதாமாதா பூரணம் என இயைத்
து ஆண்மரணத்திலும் பெண்மரணத்திலும் உபநயனவிவாக
பிரதானகாலத்தின் முன்னும்பூரணமுண்மை தெளியப்படும்.
இன்னும்விரிப்பிற்பெருகும்.

ஆசௌசவிஷயமெல்லாம் வயதினெல்லையையே ஆசிர
யிக்குமென்பதும் ஆகவே, பிரதானகாலங்கொண்டே முன்பி
ன்னிகழ்ச்சி வினைய அமைக்கப்படுமென்பதும், "வெபாவ
[illegible],,
என்றற்றொடக்கத்து ஸ்பிரசவசனங்களாலே இனிது துணிய

ப்படுதலின், விவாகம்மாத்திரம் வயஸைக்குறியாது கருமத்தையேகுறித்ததென்றதுபோலிச்சாதிப்பு. முதனூலாசிரியர் உய்த்துணரவைத்ததை வழிநூலாசிரியர் விளங்கவைத்தன்மரபாமென்பது, காமிகாகமத்தில் ஐாதநாமாஹஸ்ய ஹரஸ்யாஸகூ[illegible] (பாலனும் பாலகியும் நாமகரணம்பண்ணப்பட்டிறப்பின் சகோதரர்க்குப் பூரணம்) என்றிவ்வளவே கூறப்பட்டிருக்க, "பாலன்பாலகிநாமகரணம்பண்ணுமுன் மரித்திடிஞ்ஞருதரத்தின் வந்தவர்கட்கெல்லாமருவுமசக்திரிதினம் பின்மரித்திடிற்பூரணமாம்,, என்னுமித்தொடக்கத்த பிரமாணங்களால் இனிதுபெறப்படுதலின், "ஓரிடத்திலும் பேசாமல் விடுத்தமையாற்றான் என்பதே விடைபோலும்,, என்றது போலிமயக்கு; "அப்பொருளைப் பூர்வாபரவிரோதமென்றங்கீகரித்தனர்,, எனவே ஸ்மிருதி பிரமாணமே காட்டியதாக நினைந்தது போலிச்சூழ்ச்சி; பதினெட்டுவயசுசென்றவளிறந்த ஆசௌசத்திற்கு அதன்மேலும் விவாகம்நிகழ்ந்த பிரமாணங்காட்டாது, வேண்டாதபிறவற்றை விரித்தெழுதியது போலிவஞ்சனை; முதனூலில், "[illegible],, என்றிருப்பதையும், "[illegible],, என்று விளக்கிய சூசிகையையும் கண்டு உண்மைப்பொருளை உணராட்டாது, பிரதானகாலத்தை மறைக்கும் சூட்சியாமேலா, எட்டாம்வயதாகிய அந்தப்பிரதான விவாககாலம் நிகழ, என்னும் [illegible]

கைப்பொருளையுடைய திருவிளையாடற் புராணச்செய்யுளைத்
தம்முள்ளம்போனவாறு எட்டுவயதின்மேல் என்னுங்கருத்து
ப்படப் "பருவமாலிரண்டாக, மேற்,, எனப்பிரித்து எழுதிக்
காட்டியது போலிவிளக்கம்; பதினாறாண்டுப்பதியும் பன்னி
ராண்டுமனைவியும் புணரும் போகவியல்புரைத்த துணராது
மிருதியினும் பெரியதாக எடுத்த சூடாமணிநிகண்டிலுள்ள 'ப
தினாறுவயதுகாறும்பாலன், 'பன்னிருவயதுகாறும்பசர்பாலை,
என்னுமிவற்றைக்கண்டறியாது, பதினாறாண்டும் பெண்களுக்
கு விவாகத்துக்குரிய காலமாகக் காட்டினரென்று பேதைச்
சனங்கள் மயங்க அப்பிரமாணங்காட்டியது போலி மாயம்;
அகப்பொருட்பிரமாணமெடுத்தவர் இறையனாரகப்பொருளு
ரையில் "பிரமமென்பது நாற்பத்தெட்டியாண்டு பிரமசரிய
ங்காத்தார்க்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளை அணிகலன
ணிந்து கொடுப்பது; கொடாவிடின் ஒரிருதுக்காட்சி ஒருவ
னைச்சாராதுகழிந்தவிடத்து ஒருபார்ப்பனைக்கொலையோடொ
க்கும்,, என்றிருப்பதற்கும், தொல்காப்பியப் பொருளதிகார
வுரையில் "நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தவனுக்
குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பெய்தியவளைப்
பெயர்த்து இரண்டாம்பூப்பெய்தாமை அணிகலனணிந்துதா
னமாகக்கொடுப்பது,, என்றதற்கும் தாமே சமாதானம் பண்
ணிப் பன்னிரண்டுவருடத்தினும் அதிகமானகாலம் பிரமசரி
யங்காத்தல் கூடாதஇக்கலியுகத்தில் நாற்பத்தெட்டியாண்டு
ப் பிரமசரியவுதாரணத்தைக் காலபேதமுணராது காட்டிப்
பதினெட்டுவயதுடையாளிறந்த விஷயத்திற்குப் பூரணாச்சென

சமே கொள்ளத்தகுமென நாமே நாட்டிவிட்டேமென்று நாமேதலைகுனிந்து கொள்ளவேண்டுமே! "இராறின்மேம்பட்ட மாதரைக்கொடுப்போர்க் கிதுபயனென்றியானறியேன்," 'பூப்பவன்வதுவை முற்றுறு திருப்பிற் பூப்பவுங்கொடாது வைத்தலைச், காத்திருப்பவனீரியக்கமும்பிதிரர் கைக்கொண்டு நுகர்தலினக்தோ, மூத்தறுகுலமு மழியுமாதலினுன் மொய்த்த பூப்பினுக்குரித்தாக, யாத்தவாயுளின் முறையுளுங்கதியு மீட்டுவோர்மன்றல்செய்தளிக்க," என்னுஞ்சுப்பிரபேதாகமமொழிபெயர்ப்பும் இருதுவாகு முன்னே விதிவிவாகஞ்செயத்தகும் என்பதை உறுத்திப் பன்னிரண்டுவயதின்மேல் விவாகம் விதிவிரோதமே யென்பதைத்துணிவித்ததுகண்டிலர்போலும்!

சைவசோடசக் கிரியையிலே இருதுவாகுமுன் விவாகஞ்செய்யவேண்டுமென உறுத்திய விஷயத்தை நழுவவிட்டசூழ்ச்சியேசூழ்ச்சி! நாங்காட்டிய இவ்வாகமத்தையும் ஸ்மிருதியென்றும் இதுகொள்வோர் ஸ்மார்த்த சைவரென்றுங் கழித்துவிட்டார்போலும்! இருதுவானதன்மேல் விவாகஞ்செய்வது தருமவிவாகமாகிய, பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் என்னு நான்கிற்கும் பொருந்தாதென்பதூஉம் இந்நான்குமே இல்லறத்திற்குச் சிறந்த விதிவிவாகமென்பதூஉம் எல்லாநூற்குமொத்ததுணிவு. பூத்தபெண்ணையும் விவாகஞ் செய்கவென்னுங்காமிகாகமசம்மதங்காட்டியவர் அக்காமிகாகமத்திலே "[illegible]" =(விவாகத்தின்முற் பூப்புற்றவளைச் சேர்ந்தாற் சணவனிரய

த்தையுடையவன்) என்றிருப்பதைக்காணாதது நூதனமே! அச் சுலோகபாசத்தையும் ஸ்மார்த்தாகம சுலோகபாகமென்றுக ழித்துவிட்டாரோ! பிராயச்சித்த சமுச்சயத்தில் காம்மொழி பெயர்த்துக்காட்டிய இருதுவாகுமுன் விவாகஞ்செய்தலை உ றுத்திய வசனத்தை ஸ்மார்த்தாகம சம்மதவசனம்போலுமெ ன்றுசுழித்துவிட்டு, சௌளம் என்பதை மூன்றுவயசெனமொ ழிபெயர்த்த ஆசிரியர்கருத்தறியாது தமக்கநுகூலமென் றெ ண்ணிப் பிரமாணங்காட்டியவர் தம்முளம்போனவாறே "ம கட்பேசுமுன் மரித்தாளாயினன்றோர்க்கோர்நாள்,, என்னும வ்வளவையும் பலமாய்ப்பிடித்துக்கொண்டு, வாக்குத்தானந் தானும் நிறைவேறாத பதினெட்டுவயதுப்பெண்ணிறந்த ஆ சௌசமது பிதிர்ஞாதியர் ஒருநாளநுட்டிக்கவென்று கட்ட ளைசெய்யாததென்னே! அந்நூலையெடுத்துக்கொண்டவர் "பெ ண்மரிக்கின் மூன்றுதினங்கொள்க அவள் கணவற்கூடி மரிக்கின்றுக்காந்தன்றுதல்லார்க்காசௌசம், என்பதனால் விவாகருமாலங்களொத்துநிகழ்தலைச் சுட்டியும், "கன்னி டாயினெத்தவருணத்தாரும் முழுதுங்கொள்க,, என்பதனால் வி வாகப்பிரதானகாலங்கடந்தும் அக்கருமநிகழப்பெறாத கன்னி மரித்த ஆசௌசம் பிதிர்ஞாதியர்க்கு அவ்வவ்வருணத்தார்க் குரிய பூரணமாமென்பதைச்சுட்டியும், முழுதுங்கொள்க என் பதற்கு இதேபொருளென்பதுதுணிய "அவ்வாசௌசநீங்கிய பின்னுடன்மரிக்கின முழுதுங்கொள்க,, என விளக்கியும் உள் ளவிஷயத்தை வல்லார்வாய்க்கேட்டுணரின், பிதிர்ஞாதியர்க் குப் பூரணாசௌசமே; "திரிதினாசௌசந் தானம்,, பண்ணி

யது தவறென்று தம்வாயாலே சொல்லித் தாமே தலைகுனியா ரா!! 'தலைகுனியச்செய்யுங்க, ளென்று சைவசமயிகளை யேவுவானேன்!!

[illegible]

என்றிருக்கும் காமிகத்தில் [illegible] +

பக்ஷிணீ - என்று இவ்வளவையும் பலமாய்ப் பிடித்துக்கொண்டு, வயசு எட்டின் மேற்சம்பவித்தவிடத்து ஞாதிக்கு மூன்றுநாளாசௌசமாகும் என்று தம்முளம் போனவாறு உபசங்காரம்பண்ணவெண்ணின், மெய்ப்பொருளுணர்ந்தேமை இவ்வுபசங்காரமென்செய்யும்! இப்படிப் பொய்ப்பொருள் கொள்ளின், மூன் ஆண்மரணத்தில் நின்ற '[illegible], என்பதற்கு வயசு எழுக்கதிகமானால் தினம் எனவும் பின்னரதற்குமுடிரண எழுவயசுக்குமேல் பூரண மெனவும் பொருள் கொள்ளவேண்டுமே! சூடாகருமந்தின் மேல் எழுவயசுக்குள்

ஒன்றும் பேசப்படாமையின் ஆசௌசமில்லையென்று கொள்ளவேண்டுமே! எட்டுவயசுக்குட்பட்ட பெண்மரணத்தில் ஞாதியர்க்கேனும் பிதாமாதாச்சட்கேனும் ஆசௌசமில்லையென்று சொல்லவேண்டுமே! இப்படியெல்லாம் மயங்கப் பெருமானுக்கு முரணிப் பொய்ப்பொருளுரைத்துத் திரிதினாசௌசத்தைத் தாபித்தாலவர்பெறும்பயன் மிகப்பெரிதுபோலும்! கலைஞர்களே, அவருட்கிடையென்னாய்முடிகின்றதெனைச் சற்றே சிந்தியுங்கள். இங்கே வயசு எட்டு என்றது விவாகத்தைக்குறித்தமிற்றலின். விவாகம்வரையும் அதிகஞ் சம்பவித்தலில் பெண்மரணவிஷயத்தில் அங்ஙன மதிகமாகாது ஞாதிக்குத் திரிதினமே ஆசௌசம் (அதன்மேற் பூரணம்) இவ்வாண்பெண்மரணங்களில் பிதாமாதாக்களுக்குப்பூரணம்என்னுமிவ்வுண்மைப்பொருளை அவ்வேட்டை நன்றாகவாசித்து வல்லார்வாய்ச்சேட்டுணரின், எட்டுவயசுக்குமேற்பட்டு விவாகஞ்செய்யாதிருந்த பெண்மரணத்தில் பிதிர்ஞாதியர்க்குப்பூரணாசௌசமே; பதினெட்டுவயசு சென்று இறந்தவள் விஷயத்திலும் திரிதினாசௌசத்தாபனம் பண்ணியது தவறென்று தம் வாயாலே சொல்லித் தாமே தலைகுனியாரா! "தலைகுனியச் செய்யுங்கள்,, என்று சைவசமயிகளையேவுவானேன்! முன் பின் பாராது எடுத்த அவ்வளவையே கொண்டுபுரட்டுவது கூடுமா?

விவாகம்வரையும் மூன்றுநாளென்பது விவாகபிரதான காலவெல்லைக்குமேற் செல்லாதென்பதனாலும், அநுசற்ய பக்ஷந்தானும் இருதுவாகு முன்னேயாமென்பதனாலும்,

விவாகமென்ப தெட்டாம்வயசையும் எட்டாம் வயசென்பது விவாகத்தையும் உணர்த்தும் விவக்ஷிதார்த்தக மென்ப தூண ராதும், என்மகள் பூப்புக் காணப்பட்டாள் இவளையேற்றுக் கொள்ளவேண்டுமென்று மாமன் தன்பாவநிவிர்த்தியின்பொருட்டு க்ஷமிக்கும்படி சபையிலேசொல்லிக்கொடுக்க அவன் அவளையேற்றுப் பிராயச்சித்தஞ்செய்து கொள்ளவேண்டும் என்பது அதவாபக்ஷமாய் மறுபூப்புக்காணமுன்கொடுப்பதாகவே அதுவும் குற்றமென்பதே யவ்வாகம சம்மதமென்ப தூணராதும், காமிகாகமத்தில் "பூத்தபெண்ணையும் விவாகஞ்செய்க வென விதித்தவர்,, என்றதனாலே திரிதினசௌசஸ் தாபன மாகாதென்பதுணராதும், திரிதினசௌசஸ் தாபனம் பண்ணினவர் புத்திக்கு உலூகலாக்கிரம் ஒருவாறு ஒப்பாகுமோ!! இம்மயக்கச்சாதிப்பிறுற் பலகோயில்களைப் பாழ்படுத்தத் துணிவோர் முரணை எற்ருற்றீக்கலாமோ! விஸ்மிருதிமாங்களுக்கு ஸ்மிருதிமான்கள் முரணுகாதென்செய்வர்.

"ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசாரியர் சங்கரபண்டிதர் ஆறுமுகநாவலர் முதலியகுரவர்கள்,, சைவாகமங்களின் பெருமையைவிளக்கியதன்றி வயசுநியமம் விழுங்கச்செய்ய மிப்போலிக்கொள்கையை அங்கீகரித்தவரல்லராகவும் அங்கீகரித்தவர்போலக்காட்டிப் பேதைச்சனங்களைமருட்ட எண்ணிய துணிவே துணிவு! ஆகமத்திற் குறிக்கப்பட்டவாறே மிருதியினும் விவாகம் வரையும் திரிதினம் என்றுகுறிக்கப்பட்டிருக்கவும் ஆகமத்தில் பூப்புற்று விவாகமின்றி இறந்தால் திரிதினமென்றுகுறிக்கப்படாது மிருதியிற் பூரணமென்று குறிக்கப்படுதல் அவி

ரோதமாயிருக்கவும் ஆகமத்திற்கு அவிரோதமானவை கொள்ளப்படுமென்று தீபிகையே வற்புறுத்தியிருக்கவும் எட்டாம் வயசில் விவாகஞ்செயப்படாத பெண்ணிறப்பிற் பிதிர் ஞாதியர் பூரணமநுட்டித்தற்குக்காட்டிய ஆகமப்பிரமாணங்களே அமைவனவாயிருக்கவும் ஒருசிறிது மாராய்வின்றி, தாலிகட்டும்வரையுமென்று நினைவிலுள்ளதையே சிவவாக்காக்கச் சாதிப்போரை யானைகண்ட குருடர்க்கொப்பிடலாமோ! ஆன்றோர்களே, அபத்தக்கொள்கை யார்மாட்டதென்று கவனியுங்கள். பிரதானகாலங்கடந்தாற்பூரணம் என்றலின் அநுகற்பகாலங்கடந்தவழியும் பூரணமாவதெங்ஙனமோவெனச் சில சாமானியர் கடாவவுங்கூடும்; பிரதானகாலத்திற் கிரியை நிகழாவழியும் நிகழ்ந்ததுபோல் அதிகாசௌசங்கொள்வதன்றி, மேலுந்தவறிய குற்றத்தினாலே அதிலுமதிகங் கொள்ளலாகாதென்பதூஉந் தோன்றுதற்கன்றே அதிகமுறுதென்றியையவும் ஆசிரியர் "ஊனமுறு மாசௌச மதிகநாளங்க ளுறுதலாத்தகாலத்திற் சன்மந்தப்பிடினும்" எனவகுத்தனர்; இக்கருத்தவர்க்கில்லையேல் நாளங்களுறுதென்ற அவ்வளவானே யமைப்பர்; ஆதலின் எட்டாம்வயசில் விவாகஞ் செய்யப்படினென்? செய்யப்படாவிடினென்? அநுகற்பகாலத்திற்செய்யப்படினென்? காலக்கிரமத்திற் கேற்ப வகுத்த ஸ்மிருதிகளினமைவின்படி இருதுவானதின்மேற் செயப்படினென்? விவாகத்தை வெறுத்துத் துறவொழுக்கம் பூணினென்? பூரணாசௌசத்தையே கொள்ளத்தகுமுறவினர் கொள்வது மரபாகலின், அக்கடாநிகழ்தற்கிடமின்றாம்.

ஆன்றோர்களே! இங்கே நாம் காட்டிய சாஸ்திரவிஷய

ங்களைத் தயையோடுகவனித்துப்பார்த்து உங்கள் நடுநிலையையும் சைவசாஸ்திர உண்மையையும் உலகறிய காட்டிவைப்பீர்கள் என்று தங்களை விளித்தெழுதலாயினம்.

திரிதிருசௌசத் தீர்ப்புக்கொப்பியைப் பிரசித்தப்படுத்திய ஸ்ரீமத் செ. இராமலிங்கக்குருக்களவர்களும் மகாஸ்ரீ அ. வேன்மயில்வாகனவுபாத்தியாயரவர்களும் விபரீதவிளக்கத்தாற் சனங்களைமருட்டும் துராபிமானமொழிந்து தஞ்செயற்கிரங்கித்தாமே தலைகுனிவர்கள்.

சம்ஸ்கிருதங்கற்ற தியாரிடத்தென்பது மறந்து "ஆன்றோரனைவர்க்குங்கருத்தாதலால்,, என்றுளம்போனவாறேவரைந்து, ஆகமசாரத்தைக் கவனியாது நினைவின்படி சாயக்கருத்தளித்த ஆன்றோர்யாவரென்பதை அவர்சுயநாமத்தோடு அறியவேண்டுவதே நம்முட்கிடை.

மெய்யேவெல்லும்

இங்ஙனம் ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள் புலோலி
விகிர்தி௵மாசி௴ ௰௮௨

விகிர்தி௵கார்த்திகை௴ ௧௯௨ மந்திகையம்மைகோயிவிற்கூடிய கூட்டத்தில் குறித்த ஆசௌசவிஷயத்தில் பூரணாசௌசங்கொள்ளல்வேண்டுமென்பதே விதியென்று யாமுன்பேசியதைச்சாதித்த இப்பத்திரக்கொள்கை எமக்குஞ் சம்மதமாமென்பதை அறிஞர்யாவருமறிக. இங்ஙனம்

இ. சதாசிவக்குருக்கள். நவிண்டில் யாழ்ப்பாணம்.

வல்வை பாரதிநிலையமுத்திராக்ஷரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.